**Previous Examination date – 01.11.2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**Crl.mp. 1004 of 2025**

**Sworn Statement of Witness No.3**

| | |
|---|---|
| **Name : உமர் பாரூக்** | **Father/Husband's Name : அப்துல் வஹாப்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.11.2025.**

**Sworn Statement**

1. நான் ஆயக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 2024ம் ஆண்டு எங்கள் ஊர் ஜாமியா பள்ளிவாசல் நிர்வாக குழு பதவி காலம் முடிந்தது. அதற்கு பிறகு நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஏழு நிர்வாகிகள் தேர்ந்து எடுத்து வக்பு வாரியத்திற்கு அனுப்பி வைத்தோம். 2025ம் ஆண்டு அஜ்மத் அலி என்பவர் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதில் ஜமாத் நிர்வாகிகள் மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்வதாக கூறியிருந்தார். அதனால் நாங்கள் கூட்டம் போட்ட அன்று இரவு 8.00 மணிக்கு அஜ்மத் அலியும், அவருடன் அடியாட்களும் வந்து தகாத முறையில் பேசி கலவரமாகி தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அந்த அஜ்மத் அலி மற்றும் நபர்கள் மீது காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பிறகு ஒவ்வொரு வாரமும் அஜ்மத் அலி நிர்வாகத்தை இயங்க விடாமல் தொல்லை கொடுத்து கொண்டிருக்கிறார். அதற்கு பிறகு போலிஸ் மற்றும் வருவாய் துறை தலைமையில் அமைதி கூட்டம் நடந்தது. அதில் வக்பு வாரியம் போட்ட உத்தரவில் சட்ட நடவடிக்கை எடுத்து கொள்ளுங்கள் என்று தெரிவித்து யாரும் தகராறு செய்யக் கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் இந்த வழக்கில் சாட்சி சொல்வதால் எங்கள் மீது ஆயக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். போலிசார் விசாரணைக்கு அழைத்து நாங்கள் சென்றபின்பு விசாரித்துவிட்டு அஜ்மத் அலி கொடுத்த புகாரை பொய் என்று கண்டறிந்தார்கள். ஒவ்வொரு தடவையும் whatsapp மற்றும் சமூக வலைதளத்தில் அஜ்மத் அலி அவதூறாக செய்தி போட்டு

பிரச்சனை செய்கிறார். அஜ்மத் அலி மீது நடவடிக்கை எடுக்க புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.11.10 18:20:10 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date – 01.11.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**Crl.mp. 1004 of 2025**

**Sworn Statement of Witness No.4**

| | |
|---|---|
| **Name : ஹபீப் ராஜா** | **Father/Husband's Name : சையது முகமது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.11.2025.**

**Sworn Statement**

1. நான் புதுஆயக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் BDO ஆக வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளேன். ஆயக்குடி ஜாமியா பள்ளிவாசலில் 2024ம் ஆண்டு முத்தவல்லி பதவிகாலம் முடிந்து புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யும் பொருட்டு பள்ளிவாசலில் ஜமாத் கூடி முத்தவல்லி, செயலாளர் மற்றும் 5 உறுப்பினர்கள் தேர்வு செய்து வக்பு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்டது. அதன்பின்னர் அஜ்மத் அலி என்பவர் அவரை ஜமாத்தில் தேர்ந்தெடுக்காமல் இருப்பதை மனத்தில் வைத்து கொண்டு ஜமாத் கமிட்டி நிர்வாகத்தின் மீது பல பொய்யான ஊழல் புகார்களை தெரிவித்து ஆயக்குடி முஸ்லீம் ஜமாத்தார்களின் கட்டுப்பாட்டை சீர்குலைத்து மென்மேலும் தொந்தரவு செய்து வருகிறார். பொய் புகாரை அனுப்பி சமுதாயத்தில் நல்ல நிலையில் உள்ள எங்களை மனத்தை புண்படுத்தி, மன கஸ்டத்திற்கு ஆளாக்கப்பட்டு எங்களை அலைகழித்து வருகிறார். எனவே ஜமாத் நிர்வாகிகள் மீது பொய் புகார் அளித்து தொந்தரவு செய்து, கலவரத்தை செய்து வரும் மேற்படி நபர் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஜமாத்தின் கட்டுகோப்பை பாதுகாக்க கேட்டு கொள்கிறேன்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.11.10 18:20:20 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date – 01.11.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**Crl.mp. 1004 of 2025**

**Sworn Statement of Witness No.5**

| | |
|---|---|
| **Name : சாகுல் ஹமீது** | **Father/Husband's Name : ரக்மத்துல்லா** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.11.2025.**

**Sworn Statement**

**1. நான் புதுஆயக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆயக்குடி ஜமாத் சார்பாக ஏற்கனவே முத்தவல்லியாக இருந்தவரின் பதவிகாலம் முடிந்த பிறகு மறுபடியும் முத்தவல்லி தேர்ந்தெடுப்பதற்காக ஊர்க்கூட்டம்போட்டு பெரியோர் முன்னிலையில் 7 பேர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டு முத்தவல்லி நியமிக்கப்பட்டார். அஜ்மத் அலி என்பவர் ஜமாத் முத்தவல்லி மீது ஊழல் புகார் சொல்கிறார். முத்தவல்லியும், செயலாளரும் கௌரமான குடும்பத்தை சேர்ந்தவர்கள். எந்த அடிப்படையில் குற்றம் சொல்கிறார் என்று அவர் சொல்லவில்லை, மேற்கொண்டு நிர்வாகம் நடப்பதற்கு இடையூறு செய்கிறார். வருவாய் துறை முன்னிலையில் அமைதி கூட்டம் போட்டு கூட்டம் நடைபெற்றபோது தற்போது உள்ள நிர்வாகிகளுக்கு வக்பு வாரியம் அனுமதி கொடுத்துள்ளது என்று நிர்வாகத்திற்கு ஒத்துழைக்குமாறு அறிவுரை வழங்கினார்கள். அதையும் மீறி whatsapp வலைதளங்களில் அவர் அவதூறு பரப்பி கலகத்தை ஏற்படுத்தி ஊர் ஒற்றுமையின் நலனை கெடுக்க முயற்சிக்கிறார்.**

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.11.10 18:20:26 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**